திரு. கே. கந்தசாமி : I am very sorry. என்னுடைய மனத்தைப் புண்படுத்திப் பேசுகிற முறையிலே மாண்புமிகு உறுப்பினர்களை அனும திப்பது நியாயமா என்று கேட்க விரும்புகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் அப்படிக் கருதவில்லை......

THIRU K. M. SUBRAMANIAM : We won't tolerate abuse.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நம்முடைய ரிலிஜியன் டாலரன்ஸ் உள்ளது. டாலரன்ஸ் இல்லையென்றால் எப்படி ?

திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் நாவலர் அவர்கள் பதில் சொல்லும்போது தி.மு.க.வின் கொள்கைகள் வேறு, அரசினுடைய கடமைகள் வேறு என்று சொன்னார்கள். அப்படி யென்றால் தி.மு.க.வின் கொள்கைகளை நிறைவேற்றுகின்ற கடமை இந்த அரசுக்கு இல்லையென்று ஆகிவிடுமல்லவா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : வெள்ளைக்காரன் ஒரு காலத்திலே இந்த நாட்டை ஆண்டுகொண்டிருந்தபோது அவன் கொண்டி ருந்த சமயக் கொள்கைகள் வேறு, அரசியல் கருத்துக்கள் வேறு. நாம் கட்சி ரீதியிலே கொள்கைகளை எடுத்துச் சொல்கிறோம். அரசின் கடமை என்று வருகிறபோது நாலரைக் கோடி மக்களுடைய அடிப்படை உரிமை களைப் பாதுகாத்துத் தரவேண்டுமென்ற பொறுப்பு இருப்பதால்தான் அதை அரசின் கடமை என்று நான் குறிப்பிட்டேன்.

திருவாய்மூர் திருக்குளம்.

*473 வினா—திரு. தாழை மு. கருணாநிதி : மாண்புமிகு அற நிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா —

(அ) நாகப்பட்டினம் தாலுகா திருவாய்மூர் கிராமத்தின் திருக் குளத்திற்கான பட்டா பெற்று அதனை ஆழப்படுத்தும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) திருவாய்மூர் கிராமத்தில் குளம் புறம்போக்கு என்று பதியப் பட்டுள்ள 5.40 ஏக்கர் பரப்பளவில் உள்ள குளத்தில் மீன் பாசியை அனுபவிக்கும் பாத்தியதை அதன் வருமானத்தை கோயில் உபயோகத் திற்காகவே செலவழிக்கவேண்டுமென நிபந்தனையுடன் தியாகராச சாமி திருக்கோயிலுக்கு அளிக்கப்பட்டுள்ளது. இக் குளத்தை மேம்பாடு செய்ய வும் அதற்கு ஆறு படித்துறைகள் மற்றும் நடுவில் வட்ட வடிவமான

1975 மார்ச் 27]

மேடை அமைத்து விளக்குக் கம்பம் நாட்டவும் செயற்குறிப்பு திருக் கோயில் நிர்வாகத்தினரின் பரிசீலனையில் உள்ளது. உத்தேசச் செலவு ரூ. 9,672. இம்மேம்பாடுகள் செய்ய அவ்விடத்திற்கான பட்டா கோரி ஆலயத்தினர் விண்ணப்பித்துள்ளார்கள். இவ்விண்ணப்பம் மாவட்ட வரு வாய்த் துறை அதிகாரியின் பரிசீலனையில் உள்ளது.

கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்கள்.

*474 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) 1972 முதல் 1973 டிசம்பர் வரை திருச்சி மாவட்டத்தில் கலப்புத் திருமணம் செய்து கொண்டு தங்கப்பதக்கமும், இதர உதவியும் வேண்டி மனு செய்துகொண்டவர்களின் எண்ணிக்கை என்ன?

(இ) அதில் எத்தனை பேருக்கு உதவியும், தங்கப்பதக்கமும் அளிக் கப்பட்டது?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : (அ) 1972 முதல் 1973 டிசம்பர் வரை திருச்சி மாவட்டத்தில் கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களில்

(i) தங்கப்பதக்கப் பரிசு மட்டும் வேண்டி மனு செய்து கொண்டவர் களின் எண்ணிக்கை 2.

(ii) கலப்புத் திருமணத் தம்பதியருக்கு பொதுவாக அரசு அளிக் கும் பரிசுகளும் சலுகைகளும் வேண்டி மனு செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை 2.

(இ) நால்வருக்கும் தங்கப்பதக்கங்கள் மட்டும் வழங்கப்பட்டுள்ளன.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, கலப்புத் திருமணங்களை ஊக்குவிப்பதற்கு தங்கப் பதக்கத்தோடு இந்த அரசாங்கம் வேறு எந்த எந்த உதவிகளைச் செய்கிறது? அப்படிச் செய்கிற நேரத்திலே காலதாமதம் இல்லாமல் விரைந்து உதவியைச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : தொழில் துறையில் ஏதாவது பொருளாதாரத்தைத் தேடுவதற்கு அவர்கள் மனு செய்துகொள்வார் களானால் அவர்களுக்கு முதலிடம் கொடுப்பதை இந்த அரசு கொள்கை யாக வைத்திருக்கிறது. அந்தத் தொழில்கள் தையல் மெஷின் தொழில், தச்சுத் தொழில், சலவைத் தொழில் போன்ற தொழில்கள். அது மட்டுமல்ல, அச்சு இயந்திரம் வைப்பதற்குக்கூட, மளிகைக் கடைகள் வைப் பதற்குக்கூட, துணிக் கடைகள் வைப்பதற்குக்கூட அவர்களுக்கு முதலிடம் தரலாம். இந்தக் கேள்வியில் அவைகுறித்துக் கேட்கப்படவில்லை. அதனால் தான் பதக்கத்தைப்பற்றிய குறிப்புகளை மட்டும் கொடுத்திருக்கிறார்கள்.